# கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழி அகழ்வுப் பணி மீண்டும் நவம்பர் 20 இல் ஆரம்பமாகவிருப்பதாக தகவல்

## சட்டத்தரணி வி.கே.நிறஞ்சன் தெரிவித்தார்



கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழி அகழ்வுப் பணி எதிர்வரும் நவம்பர் மாதம் 20 ஆம் திகதி மீண்டும் ஆரம்பிக்கப்படும் என சட்டத்தரணி வி.கே. நிறஞ்சன் தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றத்தில் நீதிபதி தர்மலிங்கம் பிரதீபன் முன்னிலையில் குறித்த வழக்கு விசாரணை எடுத்துக் கொள்ளப்பட்ட பின்னர் ஊடகங்களுக்குத் தகவல் வழங்குகையிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இன்றையதினம் அகழ்வுப் பணி ஆரம்பிக்கப்படவிருந்த நிலையில் முக்கிய ஆய்வாளரான பேராசிரியர் ராஜ் சோமதேவவினால் சமுகமளிக்க முடியாதமையால் அகழ்வுப்பணிகள் பிற்போடப்பட்டதாக அவர் கூறியுள்ளார்.

அதேநேரம் மிகுதியாக உள்ள செலவுக்கான பணம் வழங்குவது தொடர்பாகப் பேசப்பட்டு, அதற்கான கணக்கறிக்கையை நீதிமன்றில் சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டது.

இன்றையதினம் இடம்பெற்ற வழக்கு நடவடிக்கையின்போது சட்ட வைத்திய அதிகாரி வாசுதேவ மற்றும் முல்லைத்தீவுமாவட்ட செயலக கணக்காளர் ஆகியோரும் பிரசன்னமாகி இருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (04)


# மாலைக்கதிர்

Maalaikkathir



யாழ்ப்பாணத்தில் இருந்து ஒரு புதிய வியாபாரக்குறி!

A new brand from Jaffna!

பூ ஆடை

PooAadai

ஆண், பெண் இருபாலாருக்குமான ஆடைகள்



சாயல் 01 வள்ளுவர் ஆண்டு 2054 ஐப்பசி 13 திங்கட்கிழமை 30.10.2023 கதிர் 102


## அடுத்த பட்ஜெட்டில் 18 வயதுக்கு மேற்பட்ட அனைவருக்கும் வருமான வரி! - விஜித ஹேரத்



2024 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டம் முழுக்க முழுக்க சர்வதேச நாணய நிதியத் தின் முன்மொழிவுகளை அடிப்படையாகக் கொண்டதாக இருக்கும் என தேசிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

2024 ஜனவரி முதல் சொத்து வரி மற்றும் பரம்பரைச் சொத்து வரி போன்ற புதிய வரிகளை விதிக்க அரசாங்கம் திட்டமிட்டுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

வரவு செலவுத் திட்டத்திற்கான பொது முன்மொழிவுகளைக் கோரி நிதி அமைச்சின் செயலாளர் வர்த்தமானி அறிவித்தல் வெளியிடுவது வழமை என்றாலும் இவ்வருடம் அவ்வாறான 2➤

## 6 மாதங்களில் குற்றச் செயல்களை முற்றாக ஒடுக்க நடவடிக்கையாம்!



எதிர்வரும் 6 மாதங்களில் குற்றச்செயல்களை முற்றாக ஒடுக்குவதற்குத் தேவையான திட்டங்கள் அமல்படுத்தப்பட்டுள்ளதாக மேல் மாகாணத்திற்குப் பொறுப்பான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னகோன் தெரிவித்துள்ளார்.

வெளிநாடுகளில் உள்ள போதைப்பொருள் கடத்தல்காரர்களே இந்நாட்டில் குற்றச்செயல்களை முன்னெடுப்பதாகத் தகவல் கிடைத்துள்ளதாகவும், இந்நாட்டில் பல குற்றவாளி-கள் தற்போது பொலிஸாரின் பிடியில் 2➤

## நாளுக்கு நாள் மாதத்திற்கு மாதம் என மக்களிடம் வரி அறவிடப்படுகின்றது!

### பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ் கருத்து



நாளுக்கு நாள் - மாதத்திற்கு மாதம் என மக்களிடம் வரி அறவிடப்படுகின்றது, என நாடாளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

இதனால், மக்களால் வாழ்வாதாரத்தைக் கொண்டு செல்ல முடியாத நிலை தற்போது உருவாகி இருக்கின்றது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மக்களுக்கு நிவாரணங்களை வழங்க வேண்டியது அத்தியாவசியம் என்றும், 2048 ஆம் ஆண்டில் டிஜிட்டல் பொருளாதாரம் உருவாக்கப்படும் என்று பேசுவதில் எந்தப் பிரயோசனமும் இல்லை என்றும் அவர் கூறியுள்ளார்.

அடுத்த வேளை உணவுக்காகப் போராடும் மக்களிடம் 25 வருடங்களின் பின்னர் 2➤

## பயங்கரவாத எதிர்ப்புச் சட்ட நிபந்தனை ஐரோப்பிய ஒன்றியக் குழு இலங்கைக்கு!

ஐரோப்பிய ஒன்றிய நாடாளுமன்ற உறுப்பினர்களின் குழுவொன்று இலங்கைக்கு வரவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மனித உரிமைகள் நிலவரம் மற்றும் ஜி.எஸ்.பி பிளஸ் வரிச்சலுகை வழங்கல் குறித்து ஆராய்வதற்காக நால்வர் அடங்கிய குழு நாட்டை வந்தடையவுள்ளது.

ஜி.எஸ்.பி பிளஸ் வரிச்சலுகை காலம் முடிவடைந்துள்ள நிலையில், அதனைத் தொடர்ந்து பெற்றுக் கொள்வதற்கு இலங்கை உள்ளிட்ட நாடுகள் மீண்டும் விண்ணப்பித்துள்ளன.

இந்தநிலையில், குறித்த விஜயத்தின்போது முக்கிய நிபந்தனைகள் நிறைவேற்றப்பட்டனவா? 2➤

## வவுனியாவில் தபால் நிலைய ஊழியர்கள் அரசுக்கு எதிராகக் கவனவீர்ப்புப் போராட்டம்



வவுனியா தபால் நிலைய உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்கள் அரசுக்கு எதிராக கவனவீர்ப்புப் போராட்டத்தை முன்னெடுத்திருந்தனர்.

வவுனியா பிரதான தபால் நிலையம் முன்பாக அஞ்சல் தொலைத் தொடர்பு சேவையாளர் சங்கத்தின் ஏற்பாட்டில் இன்று மதியம் இந்தப் போராட்டம் இடம்பெற்றது.

20 ஆயிரம் ரூபா சம்பள உயர்வு கோரியும், அரசின் 2➤

## ஆம், சொத்து வரியை அறவிடத் தீர்மானமே!

### அமைச்சர் ரஞ்சித்



சொத்து வரி ஒன்றை அறவிடுமாறு சர்வதேச நாணய நிதியத்தினால் முன்மொழியப்பட்டுள்ளதாக நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.

ஆனாலும், இவற்றில் சாதாரண மக்களின் சொத்துக்கள் உள்ளடங்க மாட்டாது என்றும், உயர் வருமானம் ஈட்டுபவர்களின் சொத்துக்களே இதில் உள்ளடக்கப்படும் என்றும் அவர் கூறியுள்ளார்.

2025 ஆம் ஆண்டில் இதனை நடைமுறைப்படுத்துவதற்கே இந்த வரித்திட்டம் தற்போது முன்மொழியப்பட்டுள்ளதாக இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய மேலும் தெரிவித்துள்ளார். (04)

# பிரிட்டனில் இருந்து வந்தவருடன் பயணித்த சொகுசு கார் பாலத்துக்குள் பாய்ந்து விபத்து



வவுனியா - ஏ 9 வீதியில் பயணித்த சொகுசு கார் ஒன்று சாரதியின் கட்டுப்பாட்டை இழந்து சாந்தசோலை சந்திப் பகுதியில் உள்ள பாலத்துக்குள் பாய்ந்து விபத்துக்குள்ளானது.

இந்த விபத்து இன்று காலை இடம்பெற்ற நிலையில் சொகுசு காரில் பயணித்த இருவரும் மயிரிழையில் எந்த வித காயங்களுமின்றி உயிர்தப்பியுள்ளனர்.

வவுனியாவில் இருந்து கனகராயன்குளம் நோக்கி ஏ 9 வீதியால் சென்ற சொகுசு கார் ஏ 9 வீதி சாந்தசோலை சந்தியில் அடைந்த போது அதே வழியில் சென்ற கனரக வாகனம் ஒன்றை முந்திச் செல்ல முற்பட்ட போது குறித்த சொகுசு கார் சாரதியின் கட்டுப்பாட்டை இழந்து பாலத்தின் தூண் ஒன்றை உடைத்துக் கொண்டு பாலத்துக்குள் பாய்ந்து விபத்துள்ளுக்குள்ளானது.

இதையடுத்து சம்பவ இடத்துக்கு வந்த வவுனியா போக்குவரத்துப் பொலிஸார் விசாரணைகளை மேற் கொண்டனர். குறித்த சொகுசு கார் பாரம் தூக்கியின் துணையுடன் மீட்டெடுக்கப்பட்டது.

விபத்தின் போது குறித்த சொகுசு காரில் பிரித்தானியாவில் இருந்து வருகை தந்த பிரித்தானிய குடியுரிமை பெற்ற ஒருவரும், பிறிதொரு இளைஞரும் பயணித்ததுடன், அவர்கள் எந்தவித பாதிப்புக்களுமின்றி உயிர் தப்பியுள்ளனர். (அ)

## வவுனியாவில் விபத்தில் குடும்பஸ்தர் ஒருவர் பலி

வவுனியா - மன்னார் வீதியில் பிரதேச செயலகத் துக்கு முற்பகுதியில் உள்ள பாதசாரி கடவையில் ஏற்பட்ட விபத்தில் மின்சார சபை ஊழியரான குடும்பஸ்தர் ஒருவர் மரணமடைந்துள்ளார்.

நேற்று இரவு இடம்பெற்ற இந்த விபத்து தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

வவுனியா - மன்னார் வீதியில் வவுனியா பிரதேச செயலகத்துக்கு முன்னால் உள்ள பாதைசாரி கடவைப் பகுதியில் வீதியோரமாக நடந்து சென்றவர் மீது பின்னால் வந்த ஹயஸ் ரக வாகனம் மோதியதில் இந்த விபத்து ஏற்பட்டுள்ளது.

முல்லைத்தீவில் மின்சார சபையில் பணி புரியும் ஊழியர் ஒருவர் குருமன்காடு கலைமகள் மைதானத்துக்கு அருகில் உள்ள வீட்டிலிருந்து தனது பணி நிமித்தம் முல்லைத்தீவு செல்வதற்காக பஸ் நிலையம் நோக்கி நடந்து சென்றபாபோதே இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்தில் வவுனியா - மன்னார் வீதி கலைமகள் மைதானத்தருகில் வசித்து வந்த மூன்று பிள்ளைகளின் தந்தையான 48 வயதுடைய நௌபர் என்ற இந்த நபர் படுகாயமடைந்து வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்ட நிலையில் சிகிச்சை பலனின்றி மரணமடைந்துள்ளார்.

ஹயஸ் ரக வாகனத்தின் சாரதி பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

விபத்து தொடர்பில் மேலதிக விசாரணைகளை வவுனியா பொலிஸ் நிலையப் போக்குவரத்துப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ)

## வெள்ளப்பெருக்குக் குறித்து எச்சரிக்கை அறிவிப்பு!

தெதுரு ஓயா பள்ளத்தாக்கின் தாழ் நிலப்பகுதிகளில் அடுத்த சில மணித்தியாலங்களில் சிறு வெள்ளப் பெருக்கு ஏற்படக்கூடும் என நீர்ப்பாசன திணைக்களம் அறிவித்துள்ளது.

நேற்று இரவு முழுவதும் பெய்த அடை மழை காரணமாக தெதுரு ஓயா நீர்த்தேக்கத்திலிருந்து வினாடிக்கு 14,000 கன அடி வீதம் நீர் திறந்து விடப்படுவதாகவும் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதன்படி, அடுத்த சில மணித்தியாலங்களில் வாரியபொல, நிக்கவரட்டிய, மஹவ, கொபேகனே, பிங்கிரிய, பள்ளம, ஹலவத்த, ஆராச்சிக்கட்டுவ மற்றும் ரஸ்நாயக்கபுர ஆகிய பிரதேச செயலகப் பிரிவுகளுக்கு உட்பட்ட தாழ்நிலப் பிரதேசங்கள் சிறு வெள்ளப்பெருக்கு ஏற்படக்கூடும் என்றும்,

இந்த நிலை குறித்து மக்களை மிகவும் அவதானத்துடன் இருக்குமாறும், அவ்வழியாகச் செல்லும் சாரதிகள் தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் நீர்ப்பாசன திணைக்களம் தெரிவித்துள்ளது.

### வவுனியாவில் தபால் நிலைய ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செயற்பாட்டைக் கண்டித்தும் நாடு பூராகவும் இடம்பெறும் தொழிற்சங்கப் போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்து இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது, "20 ஆயிரம் ரூபாய் சமப்பள அதிகரிப்பை வழங்கு", "வாழ்க்கைச் செலவைக் குறைத்திடு", "மக்களுக்கு நிவாரணம் வழங்கு", "மின்சாரக் கட்டணத்தைக் குறைத்திடு" என எழுதப்பட்ட சுலோக அட்டைகளைப் போராட்டக்காரர்கள் ஏந்தியிருந்தனர்.

இதில் தபால் நிலைய உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (அ)

### பயங்கரவாத எதிர்ப்புச் சட்ட ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எனப் பரிசீலிக்கப்பட்டு தீர்மானம் எடுக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, இலங்கைக்கு ஏற்கெனவே ஜி.எஸ்.பி பிளஸ் வரிச்சலுகை வழங்கப்பட்டபோது பயங்கரவாதத் தடைச்சட்டத்தை முழுமையாக நீக்கவேண்டும் அல்லது சர்வதேச நியமங்களுக்கு அமைவாக அதனைத் திருத்தியமைக்க வேண்டும் என பிரதான நிபந்தனையாக முன்வைக்கப்பட்டது.

எவ்வாறாயினும், பயங்கரவாத எதிர்ப்புச்சட்டமூலத்தை கொண்டுவர அரசாங்கம் நடவடிக்கை எடுத்துவரும் நிலையில் குறித்த சட்டமூலத்தின் உள்ளடக்கத்திற்கு கடுமையான எதிர்ப்புக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.

இவ்வாறானதொரு பின்னணியிலேயே ஐரோப்பிய ஒன்றிய நாடாளுமன்றத்தில் பின்லாந்து, போலந்து, ஜேர்மனி மற்றும் லிதுவேனியாவை பிரதிநிதித்துவப் படுத்தும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழுவினர் நாட்டுக்கு வருகைதரவுள்ளனர். (க)

### நாளுக்கு நாள் மாதத்திற்கு .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நடக்கப் போகும் விடயங்கள் குறித்துப் பேசுவதில் அர்த்தம் இருக்கின்றதா? என்று அவர் கேள்வியை முப்பியுள்ளார். (04)

### 6 மாதங்களில் குற்றச் செயல்களை ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்டபோது தென்னகோன் இந்தத் தகவல்களைத் தெரிவித்துள்ளார். (04)

### அடுத்த பட்ஜெட்டில் 18 .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நடைமுறை பின்பற்றப்படவில்லை எனவும் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

சர்வதேச நாணய நிதியத்தின் இரண்டாம் தவணையை வெளியிட விடுக்கப்பட்ட நிபந்தனைக்குப் பிறகு மின் கட்டணம் உயர்த்தப்பட்டது போல், 2024 ஆம் ஆண்டிற்கான பட்ஜெட் ஐ.எம்.எப். முன்மொழிவுகளின் அடிப்படையிலேயே இருக்கும் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அரச வருமானத்தைத் தற்போதைய 9 வீதத்தில் இருந்து 12 வீதமாக அதிகரிப்பதற்காக 2024 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டத்தின் ஊடாக புதிய வரிகளை அறிமுகப்படுத்துமாறு சர்வதேச நாணய நிதியம் அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளதாக விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

அதன்படி 18 வயதுக்கு மேற்பட்ட அனைவருக்கும் வருமான வரிக் கோப்புகள் அடுத்த ஆண்டு ஜனவரி முதல் திறக்கப்படும் என்றும் விஜித ஹேரத் கூறியுள்ளார். (04)




## விற்பனையாளர் தேவை

**நிறுவனம்:** யாழ்முற்றம்
**பால்:** இருபாலரும்
**வேலை நேரம்:** காலை 7:00 மணி - மாலை 7 மணி வரை
**சம்பளம்:** பேசித் தீர்மானிக்கப்படும்
**தொடர்புகளுக்கு:** +94 77 307 8799

உங்கள் பிரதேசத்து நிகழ்வுகள் பற்றிய விபரங்களை எமக்கு அனுப்பிட
maalaikkathir@gmail.com

செய்திகளையும் இன்னும் பல காணொளிகளையும் பார்வையிட




காலைக்கதிர் TV YouTube தளம்

# தம்பலகாமம் தொழில் முனைவோர் சங்கத்திற்கு ஆறு இலட்சம் ரூபா நிதி கையளிக்கப்பட்டது



(ஹஸ்பர்)

தம்பலகாமம் பிரதேச செயலகப் பகுதியில் இயங்கி வரும் தொழில் முனைவோர் சங்கத்திற்கு ஆறு இலட்சம் ரூபா நிதி கையளிக்கப்பட்டது.

தம்பலகாமம் பிரதேச செயலாளர் திருமதி ஜெ.ஸ்ரீபதியின் வழிகாட்டுதலுக்கிணங்க பாலம் போட்டாறு பெண்கள் தொழில் முனைவோர் சங்கத்திற்கு, திருகோணமலை மக்கள் சேவை மன்றத்தினால் வன்னிகோப் அவுஸ்ரேலியா, காந்தி சேவை மன்றம் நியூசிலாந்து ஆகியோரின் நிதிப் பங்களிப்பில் ரூபாய் 600,000 நன்கொடையாக பிரதேச செயலகத்தில் வைத்து வழங்கி வைக்கப்பட்டது.

தங்களது தொழிலை விருத்தி செய்ய சங்க உறுப்பினர்களுக்கு வட்டியற்ற கடனாக இத்தொகை பகிர்ந்து வழங்கப்படவுள்ளது.

இந்த நிகழ்வில் கணக்காளர் செல்வதாஸ், நிருவாக உத்தியோகத்தர் உடகெதர மற்றும் பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர் பங்குபற்றுதலுடன், மக்கள் சேவை மன்ற உத்தியோகத்தர் பிரகலாதனால் சங்கத்தினருக்கு காசோலை வழங்கிவைக்கப்பட்டது.

# தேசியமட்ட மெய்வல்லுநர் போட்டியில் மகாஜனா மாணவிக்கு வர்ண விருது



(அஸ்ஹர் இப்றாஹிம்)

அகில இலங்கைப் பாடசாலைகளுக்கிடையிலான தேசியமட்ட மெய்வல்லுநர் போட்டிகள் கொழும்பு சுகததாஸ விளையாட்டரங்கில் கடந்த வாரம் நடைபெற்றிருந்தன.

20 வயதுக்குட்பட்ட பெண்களுக்கான கோலூன்றிப்பாய்தலில் தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரி வீராங்கனை பு.டனுசிகா 2.60 மீற்றர் தாண்டி வர்ண விருதைப் பெற்றுள்ளார்.

# தேசிய மட்ட தமிழ்மொழி தினப் போட்டியில் காரைதீவு மாணவிக்குத் தங்கப் பதக்கம்



(வி.ரி.சகாதேவராஜா)

தேசியமட்ட தமிழ்மொழித் தினப் போட்டியில் காரைதீவு இ.கி.மி பெண்கள் வித்தியாலய மாணவி செல்வி.ராஜேந்திரகுமார் மகோற்ஷபி நான்காம் பிரிவு சிறுகதை ஆக்கத்தில் முதலாம் இடத்தைப் பெற்று தேசியமட்டத்தில் தங்கப் பதக்கம் பெற்றுள்ளார்.

இவர் அம்பாறை மாவட்ட கால்நடை அபிவிருத்தி உத்தியோகத்தர் ராஜேந்திரகுமார், தாதிய பரிபாலகி பவளேந்தினி தம்பதியினரின் சிரேஷ்ட புதல்வியாவார்.

# கதிரவெளி பால்சேனை தமிழ் மகா வித்தியாலய மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கல்



(நூருல் ஹுதா உமர்)

கல்குடா கல்வி வலய கதிரவெளி பால்சேனை தமிழ் மகாவித்தியாலயத்தில் கல்வி கற்கும் அதிகஷ்ட குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் மற்றும் புத்தகப்பைகள் வழங்கும் நிகழ்வு பாடசாலையின் பிரதி அதிபர் நா. தயாகரன் தலைமையில் இன்று இடம்பெற்றது.

ஏழை மாணவர்களின் கல்விக்கு தொடர்ந்தும் உதவிக்கரம் நீட்டி வரும் இணைந்த கரங்கள் அமைப்பின் இணைப்பாளர்களான லோ.கஜரூபன், சி.காந்தன் ஆகியோர் கலந்துகொண்டு மாணவர்களுக்கு 5000 ரூபாய் பெறுமதியான கற்றல் உபகரணங்கள் மற்றும் புத்தகப்பை என்பனவற்றை வழங்கி வைத்தனர்.

இணைந்த கரங்கள் அமைப்பு கல்விக்கான சேவையை ஆரம்பித்து ஒரு வருட காலத்தில் நூற்றுக்கு மேற்பட்ட பாடசாலைகளின் ஆயிரக்கணக்கான மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் மற்றும் புத்தகப்பை என்பவற்றை வழங்கி அவர்களின் கல்விச் செயற்பாட்டினை முன்னெடுக்க உதவி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.



# காஸாவில் ஐக்கியநாடுகளின் நிவாரணப் பொருள்கள் களவு



காஸாவில் பாதிக்கப்பட்டுள்ள மக்களில் ஆயிரக் கணக்கானோர், அங்குள்ள ஐக்கியநாடுகளின் 4 நிவாரணப் பொருள் சேமிப்பிடங்களில் சனிக்கிழமை புகுந்து மா, சுகாதாரப் பொருள்கள் உள்ளிட்டவற்றைக் கொள்ளையடித்துச் சென்றனர்.

இது அவர்களுக்கிடையே விரக்தி அதிகரித்து வருவது, பொது ஒழுங்கு சீர்குலைந்துள்ளமை ஆகிய வற்றின் அடையாளமாக உள்ளது, என்று ஐ.நா. செய்தித் தொடர்பாளர் தெரிவித்துள்ளார்.

கடந்த வெள்ளிக்கிழமை இஸ்ரேலின் மிகத் தீவிர மான தாக்குதல் காரணமாக, காஸாவில் பெரும்பா லான தகவல் தொடர்பு வசதிகள் துண்டிக்கப்பட்டன. இந்நிலையில், அங்குள்ள பலருக்கு அந்த வசதிகள் மீண்டும் வழங்கப்பட்டுள்ளதாக உள்ளூர்த் தொலைத் தொடர்பு நிறுவனங்கள் தெரிவித்துள்ளன. (04)



# ஆந்திராவில் ரெயில் விபத்து 14 பேர் பலி - பலர் படுகாயம்!

ஆந்திரத்தின் விஜயநகர மாவட்டத்திற்கு உள்பட்ட ரயில் நிலையம் ஒன்றில் சமிக்ஞைக்குக் காத்திருந்த பயணிகள் ரயில் மீது அதே தடத்தில் வந்துகொண்டிருந்த பலாசா எக்ஸ்பிரஸ் ரயில் மோதியதில் மூன்று பெட்டிகள் தடம் புரண்டுள்ளன.

இந்நிலையில், இந்த விபத்தில் சிக்கி 14 பேர் பலியானதாக முதல்கட்டத் தகவல் வெளியாகியுள்ளது. படுகாயமடைந்த பலர் மருத்துமனைக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளனர்.

இக்கோர விபத்தால் அப்பகுதி முழுக்கப் பதற்றம் ஏற்பட்டுள்ளது. பெட்டிகளுக்குள் சிக்கிய பயணிகளை மீட்கும் பணிகளும் தீவிரமாக நடைபெற்று வருகின்றன.

ரயில் விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு இரங்கல் தெரிவித்துள்ள இந்தியப் பிரதமர் மோடி, மீட்புப் பணிகள் தொடர்பாக ரயில்வே துறை அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவிடம் ஆலோசனை நடத்தியுள்ளார்.

மேலும், விபத்தில் பலியானவர்களின் குடும்பத்தினருக்கு 10 லட்ச ரூபா இழப்பீடு வழங்க மாநில அரசும் 2 லட்சம் ரூபாவை வழங்க இந்திய மத்திய அரசும் முன்வந்துள்ளன. (04)

# இஸ்லாமிய நாடுகளுக்கு விதிக்கப்பட்ட பயணத் தடை மீண்டும் கொண்டுவரப்படும்! – ட்ரம்ப் சர்ச்சைப் பேச்சு

அமெரிக்க அதிபராக தான் மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்டால் இஸ்லாமிய நாடுகளைச் சேர்ந்த மக்களுக்கு அமெரிக்காவுக்குள் நுழைய விதிக்கப்பட்ட பயணத் தடை மீண்டும் கொண்டுவரப்படும் என அந்நாட்டின் முன்னாள் அதிபர் டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

இஸ்லாமியர்களுக்கு எதிரான ட்ரம்ப்பின் இந்தக் கருத்துக்கு அமெரிக்க அதிபர் மாளிகை கண்டனம் தெரிவித்துள்ளது.

கடந்த 2017 ஆம் ஆண்டு அமெரிக்க அதிபராக டொனால்ட் ட்ரம்ப் இருந்தபோது, ஈரான், லிபியா, சோமாலியா, சிரியா, யேமன், இராக், சூடான் ஆகிய இஸ்லாமிய நாடுகளிலிருந்து வரும் பயணிகள் அமெரிக்காவுக்குள் நுழையத் தடை விதிக்கப்பட்டது. தற்போதைய அதிபர் ஜோ பைடன் அந்தத் தடையை நீக்கினார்.

இந்நிலையில், குடியரசுக் கட்சியின் யூதக் கூட்டமைப்பின் ஆண்டு உச்சிமாநாட்டில் ட்ரம்ப் சனிக்கிழமை பங்கேற்றுப் பேசுகையில், இஸ்லாமியர்களுக்கு எதிரான பயணத் தடை உங்களுக்கு நினைவிருக்கிறதா? நான் இரண்டாவது முறை அமெரிக்க அதிபராகப் பொறுப்பேற்கும் முதல் நாளில், அந்தப் பயணத் தடையை மீண்டும் கொண்டு வருவேன்.

நமது நாட்டைக் கெடுக்கும் எண்ணம் கொண்ட மக்கள் நம் நாட்டுக்கு வருவதை விரும்பாததால், பயணத் தடையை நாங்கள் கொண்டுவந்தோம். அது மாபெரும் வெற்றியாகும். நமது நாட்டிலிருந்து கெட்டவர்களை வெளியேற்றியதால் 4 ஆண்டுகளில் எந்தவொரு அசாம்பவிதச் சம்பவங்களும் நடைபெறவில்லை.

இஸ்ரேலியர்களுடன் அமெரிக்கர்கள் துணை நிற்கிறோம். உங்கள் கவலைகளை நாங்கள் பகிர்ந்து கொள்கிறோம். ஜோ பைடனின் பலவீனம் நமது நாட்டை நாசமாக்கிவிடும் என்ற அச்சத்தில் உள்ள ஒவ்வொரு அமெரிக்கருக்கும் இந்த உறுதிமொழியை நான் அளிக்கிறேன். உங்களின் அடுத்த அதிபராக, வலிமையின் மூலம் அமைதியை மீட்டெடுத்து, மூன்றாம் உலகப் போரை நான் தடுப்பேன், என்றார்.

டொனால்ட் டிரம்பின் கருத்துத் தொடர்பாக அமெரிக்க அதிபர் மாளிகை செய்தித் தொடர்பாளர் அண்ட்ரூ பட்ஸ் கூறுகையில், இஸ்லாமியர்கள் என்றாலே ஆபத்தானவர்கள் என்ற கருத்தைப் பரப்புவது ஒரு 'பேரழிவு நோய்' என்று அமெரிக்க அதிபர் ஜோ பைடன் கடந்த 2020 ஆம் ஆண்டு தெரிவித்தார்.

அத்தோடு, ட்ரம்ப் கொண்டுவந்த அமெரிக்கர்கள் அல்லாத இஸ்லாமியர்களுக்கான பயணத் தடையை நீக்கியதில் பெருமிதமும் கொண்டார்.

வெறுப்புக்கு எதிராக நாம் அனைவரும் ஒன்றுபட வேண்டியது அவசியம். அரபு அமெரிக்கர்கள் மற்றும் இஸ்லாமிய சமூகத்தினருக்கு எதிரான இந்த அவமானகரமான தாக்குதல்கள் நமது நாட்டின் நிலைப்பாட்டுக்கு எதிரானவையாகும். இதை அனைத்து அமெரிக்கர்களும் கண்டிக்க வேண்டும். இஸ்லாமிய வெறுப்புச் சம்பவங்களின் அதிகரிப்பு நமது தேசத் தன்மையின் மீதான நேரடித் தாக்குதல், என்று தெரிவித்துள்ளார். (04)



# உக்ரைனின் 36 ட்ரோன்களை சுட்டு வீழ்த்தியதாக ரஷ்யா அறிவித்தது

உக்ரைனின் 36 ஆளில்லா விமானங்களை (ட்ரோன்கள்) ரஷ்ய வான் பாதுகாப்பு அமைப்பு சனிக்கிழமை இரவு சுட்டு வீழ்த்தியதாக அந்நாட்டின் பாதுகாப்பு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக ரஷ்ய பாதுகாப்பு அமைச்சகம் வெளியிட்ட செய்திக்குறிப்பில், கருங்கடல் மற்றும் கிரீமியா தீபகற்பப் பகுதியில் தாக்குதல் நடத்தத் திட்டமிட்டு ஏவப்பட்ட உக்ரைனின் 36 ஆளில்லா விமானங்களை நாட்டின் வான் பாதுகாப்பு அமைப்பு சனிக்கிழமை இரவு சுட்டு வீழ்த்தியது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனிடையே, கருங்கடல் பகுதியையொட்டிய தெற்கு கிராஸ்னோடார் பிராந்தியத்தில் அமைந்துள்ள எண்ணெய்ச் சுத்திகரிப்பு ஆலையில் ஞாயிற்றுக் கிழமை அதிகாலை தீ விபத்து ஏற்பட்டதாக உள்ளூர் அதிகாரிகள் தெரிவித்தனர். ஆனால், தீ விபத்துக்கான காரணத்தை அவர்கள் குறிப்பிடவில்லை.

ஆளில்லா விமானத் தாக்குதல் அல்லது கீழே விழுந்த ஆளில்லா விமானத்தின் சிதறல்களால் இந்த தீ விபத்து ஏற்பட்டிருக்கலாம் என உள்ளூர் ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

அதேவேளையில், ரஷ்யாவால் ஏவப்பட்ட 5 ஈரான் தயாரிப்பு ஆளில்லா விமானங்களைச் சுட்டு வீழ்த்தியதாக உக்ரைன் விமானப் படை நேற்றுத் தெரிவித்திருந்தது. (04)

# மீனவர்கள் பிரச்சினைக்கு ஆக்கபூர்வமான நடவடிக்கை இல்லை! டிடிவி தினகரன் டுவிட்டர் தளத்தில் ஸ்டாலின் மீது குற்றச்சாட்டு!



மீனவர்கள் பிரச்சினைக்கு ஆக்கபூர்வமான நடவடிக்கை ஏதும் எடுக்கப்படவில்லை, என அமமுக பொதுச் செயலர் டிடிவி தினகரன் குற்றஞ்சாட்டியுள்ளார்.

இது குறித்து அவர் டுவிட்டர் தளத்தில் வெளியிட்டுள்ள பதிவில், இலங்கைக் கடற்படையினர் ஏற்கெனவே கைது செய்துள்ள மீனவர்களை இதுவரை விடுவிக்காத நிலையில், இப்போது மேலும் 37 பேரைக் கைது செய்திருப்பது மீனவர்கள் மத்தியில் அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது.

தமிழக மீனவர்கள் ஒவ்வொரு முறையு கைது செய்யப்படும்போதும் மத்திய அரசுக்குக் கடிதம் எழுதுவதை மட்டுமே முதல்வர் வழக்கமாகக் கொண்டிருக்கிறார். மீனவர்கள் பிரச்னைக்கு முற்றுப்புள்ளி வைக்க எந்தவித ஆக்கப்பூர்வமான நடவடிக்கையும் இதுவரை எடுக்கவில்லை.

எனவே, மீனவர்கள் அச்சமின்றி தொழிலைச் செய்யத் தேவையான நடவடிக்கைகளை மத்திய, மாநில அரசுகள் எடுக்க வேண்டும், என்று அவர் தனது பதிவில் வலியுறுத்தியுள்ளார். (04)

# கல்முனை மெற்றோ பொலிட்டனின் 5 ஆவது ஆண்டு நிறைவு விழா

(ஏ.எஸ்.மௌலானா)

கல்முனை மெற்றோ பொலிட்டன் கல்லூரியின் 5 ஆவது ஆண்டு நிறைவு விழா நேற்று சனிக்கிழமை (28) கல்லூரி வளாகத்தில் வெகு மிமர்சையாக நடைபெற்றது.

கல்லூரியின் தவிசாளரும் கல்முனை மாநகர முன்னாள் முதல்வருமான கலாநிதி சிராஸ் மீராசாஹிப் தலைமையில் இடம்பெற்ற விழா கொண்டாட்டங்களில் முக்கிய நிகழ்வாக நடைபவணி ஒன்றும் இடம்பெற்றது.

இதில் கல்லூரி மாணவர்கள், விரிவுரையாளர்கள் மற்றும் உத்தியோகத்தர்களுடன் பொது அமைப்புகளின் பிரதிநிதிகள், பிரமுகர்கள், இளைஞர்கள் மற்றும் பொது மக்களும் கலந்து கொண்டிருந்தனர்.

கல்முனை பிரதான வீதியில் அமைந்துள்ள கல்லூரி வளாகத்தில் இருந்து ஆரம்பமான இந்நடைபவணி

சாய்ந்தமருது பிரதான வீதி மற்றும் உள்ளூர் வீதிகளுடாக சென்று மீண்டும் கல்லூரியை வந்தடைந்தது.

இந்நடைபவணிக்கு முன்னதாக தேசியக் கொடி மற்றும் கல்லூரியின் கொடி என்பன ஏற்றப்பட்டு விசேட துஆப் பிரார்த்தனையும் இடம்பெற்றது. மௌலவி எம்.எம். ஜமால்தீன் துஆப் பிரார்த்தனையை மேற்கொண்டார். இதன்போது பலஸ்தீன் மீட்புக்காகவும் காஸா மக்களுக்காகவும் துஆப் பிரார்த்தனை மேற்கொள்ளப்பட்டது.

விழாவின் மற்றொரு முக்கிய அம்சமாக ஒரு இலட்சம் பெறுமதியான கற்கை நெறியை முற்றிலும் இலவசமாக பயில்வதற்காக 10 மாணவர்களுக்கு புலமைப்பரிசில் வழங்கி வைக்கப்பட்டது. குலுக்கல் முறையில் இவர்கள் தெரிவு செய்யப்பட்டனர்.




இவ்விழாவில் கலை, கலாசார நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன. கல்லூரியின் கல்விச் செயற்பாடுகளை விபரிப்பதற்கான ஊடகவியலாளர் மாநாடு ஒன்றும் நடத்தப்பட்டது. கல்லூரியில் பணியாற்றும் விரிவுரையாளர்கள் மற்றும் உத்தியோகத்தர்கள் நினைவுச் சின்னம் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

மழைக்கு மத்தியிலும் மெற்றோ பொலிட்டன் கல்லூரியின் 5 ஆவது ஆண்டு நிறைவு விழா நிகழ்வுகள் வெகு சிறப்பாக நடைபெற்றிருந்தன.

## அகில இலங்கைத் தமிழ் மொழித் தின சிறுகதையாக்கம் அக்கரைப்பற்று முஸ்லிம் மத்திய கல்லூரி மாணவி முதலிடம்



(எம்.ஏ.றமீஸ்)


கல்வி அமைச்சின் மூலம் இவ்வாண்டுக்காக நடத்தப்பட்ட அகில இலங்கை தமிழ் மொழித் தினப் போட்டிகளின்போது அக்கரைப்பற்று முஸ்லிம் மத்திய கல்லூரி மாணவி தேசிய மட்டத்தில் முதலாமிடம் பெற்று பாடசாலைக்கு பெருமை சேர்த்துள்ளார் என கல்லூரியின் அதிபர் ஏ.எச். பௌஸ் தெரிவித்தார்.

அகில தமிழ் மொழித் தினப் போட்டிகளின் தேசிய மட்டப் போட்டிகள் சனிக்கிழமை கொழும்பு விவேகானந்தா கல்லூரியில் இடம்பெற்றன. இதன்போது ஐந்தாம் பிரிவுப் போட்டியில் சிறுகதையாக்கப் போட்டியில் பங்குபற்றிய இப்பாடசாலை மாணவி ஏ.எல்.பாத்திமா நுஸ்றா தேசிய மட்டத்தில் முதலாம் இடத்தைப் பெற்றுத் தங்கப் பதக்கத்தினை சுவீகரித்துள்ளார்.

இப்போட்டியில் வெற்றி அடைந்து வரலாற்றுச் சாதனை படைத்த மாணவிக்கு தமது பாராட்டுதல்களைத் தெரிவிப்பதுடன், இம்மாணவியினை வழிப்படுத்திய ஆசிரியர்கள், பிரதி உதவி அதிபர்கள், கல்வித்துறை அதிகாரிகள், மற்றும் நலன் விரும்பிகள் அனைவருக்கும் தமது நன்றியறிதலைத் தெரிவிப்பதுடன், விரைவில் இம்மாணவியும் துறைசார்ந்தோரும் பாராட்டிக் கௌரவிக்கப்படவுள்ளனர் எனவும் அதிபர் மேலும் தெரிவித்தார்.




## அகில இலங்கை தமிழ் மொழித் தினம் - 2023 நிந்தவூர் அல்-அஷ்ரக் மாணவி மூன்றாமிடம்



(எம்.எஸ்.எம்.ஸாகிர்)

தேசிய மட்டத் தமிழ் மொழித் தினப் போட்டியில், நிந்தவூர் அல்-அஷ்ரக் தேசியப் பாடசாலை சார்பாக கட்டுரைப் பிரிவு - 3 இல் கலந்து கொண்ட செல்வி எம்.எச்.பாத்திமா ஹப்னா தேசியத்தில் மூன்றாமிடம் பெற்றுள்ளார்.

இவரைப் பயிற்றுவித்த தமிழ் மொழிப்பாடப் பொறுப்பாசிரியர் வை.எம்.அஷ்ரப் மற்றும் தமிழ் இலக்கிய மன்ற முன்னாள் தலைவரும் பல்கலைக்கழக மாணவனுமான முஸ்பிர் அஹமட், அத்துடன் வெற்றிகளுக்கு பல வழிகளிலும் ஒத்துழைப்பு வழங்கிக் கொண்டிருக்கும் பாடசாலை அதிபர் அ.அப்துல்கபூர் ஆகியோருக்கு பாடசாலைச் சமூகம் சார்பாக பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினர் தமது நன்றிகளைத் தெரிவித்துள்ளனர்.

## தேசிய மட்டத் தமிழ் மொழித்தினக் கட்டுரைப் போட்டியில் பட்டிருப்பு மத்திய மகாவித்தியாலய மாணவி முதலிடம்



(அஸ்ஹர் இப்றாஹிம்)

கல்வியமைச்சு அகில இலங்கை ரீதியில் நடாத்திய தேசிய மட்டத் தமிழ் மொழித்தினப் போட்டியில் பட்டிருப்பு மத்திய மகா வித்தியாலய தரம் 13 கலைப் பிரிவு மாணவி பு.டிலக்சனா, கட்டுரை வரைதல் போட்டியில் முதலிடம் பெற்றுள்ளார்.

# அட்டாளைச்சேனைப் பிரதேச செயலகத்திற்கு முன்பாக அரச உத்தியோகத்தர்கள் கவன ஈர்ப்புப் போராட்டம்!

(எம்.எப்.நவாஸ்)

தேசிய ரீதியாக அரச உத்தியோகத்தர்கள் இன்று முன்னெடுத்த கவன ஈர்ப்புப் போராட்டத்தின் ஓர் அங்கமாக, அம்பாறை மாவட்ட - அட்டாளைச்சேனை பிரதேச செயலகத்திற்கு முன்பாக அம்பாறை மாவட்ட தொழிற் சங்க தலைவர் கே.எம்.கபீர் தலைமையில் சம்பள அதிகரிப்பைக் கோரி போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

எரிபொருள், சமையல் எரிவாயு, நீர் - மின் கட்டணங்கள் மற்றும் அத்தியவசியப் பொருட்களின் விலை அதிகரிப்புக்கு எதிர்ப்புத் தெரிவித்தும், அரச ஊழியர்களுக்கு 20,000 ரூபா சம்பளம் அதிகரிப்பை எதிர்வரும் வரவு செலவுத் திட்டத்தில் இணைத்துக் கொள்ளப்பட வேண்டும் என்று வலியுறுத்தியும் போராட்டம் நடைபெற்றது.

இது தொடர்பாக அரசாங்கம் கவனம் செலுத்தாத பட்சத்தில் எதிர்காலத்தில் பாரிய போராட்டங்களை மேற்கொள்ளவுள்ளதாகவும் போராட்டத்தில் கலந்து கொண்ட உத்தியோகத்தர்கள் தெரிவித்தனர்.

கடந்த 16ஆம் திகதியும் இவ்வாறான கவன ஈர்ப்புப் போராட்டம் இடம்பெற்றமையும் குறிப்பிடத்தக்கது.




# மின்சாரம் மற்றும் இலத்திரனியல் போக்குவரத்து தொடர்பான சர்வதேச கண்காட்சி ஒத்திவைப்பு

## அடுத்த வருடம் மார்ச் மாதம் நடைபெற ஏற்பாடு

2023 சர்வதேச போக்குவரத்துத் தினத்துடன் இணைந்ததாக போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் வெகுஜன ஊடக அமைச்சின் ஏற்பாட்டில் அடுத்த வருடம் மார்ச் 22, 23 மற்றும் ஏப்ரல் 2 ஆகிய திகதிகளில், ஹோமாகம - பிட்டபன பகுதியை மையமாகக் கொண்டு, மின்சாரம் மற்றும் இலத்திரனியல் போக்குவரத்து தொடர்பான சர்வதேச கண்காட்சி மற்றும் மாநாட்டை நடத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இக்கண்காட்சி நடப்பு வருடம் நொவம்பர் 10, 11, 12 ஆகிய திகதிகளில் நடத்துவதற்கு முன்னர் திட்டமிடப்பட்டிருந்தது. எனினும், அமைச்சர் பந்துல குணவர்தன தலைமையிலான கூட்டு நடவடிக்கைக் குழுவின் ஆலோசனைக்கு அமைய, அதற்குப் போதிய கால அவகாசம் வழங்கும் வகையில் இக்கண்காட்சியை ஒத்திவைக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, நவம்பர் 10 ஆம் திகதி சர்வதேச பொதுப் போக்குவரத்துத் தினம் மற்றும் நவம்பர் 26 ஆம் திகதி உலக நிலையான போக்குவரத்துத் தின மாநாடு ஆகிய நிகழ்வுகளை நடத்துவதற்கு போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் வெகுஜன ஊடக அமைச்சர் பந்துல குணவர்தனவின் தலைமையிலான போக்குவரத்து இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவன்ன உள்ளிட்ட விழா ஏற்பாட்டுக் குழுவினர் தீர்மானித்துள்ளனர்.

இந்தக் கண்காட்சியின் முக்கிய நோக்கம் நாட்டின் மின்சாரம் மற்றும் தொழிநுட்பப் போக்குவரத்துத் துறையின்பால் உள்ளூர் மற்றும் சர்வதேசக் கவனத்தை ஈர்ப்பதாகும். (ரெ-21)

# சௌமியமூர்த்தி தொண்டமானின் 24 ஆவது சிரார்த்த தினம் இன்று



மலையகத்தின் மூத்த அரசியல் தலைவரும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் ஸ்தாபகருமான அமரர். சௌமியமூர்த்தி தொண்டமானின் 24 ஆவது சிரார்த்த தினம் இன்று நாடாளுமன்ற வளாகத்தில் நினைவுகூரப்பட்டது.

நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் அமைந்துள்ள அன்னாரின் உருவச்சிலைக்கு இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் பொதுச் செயலாளரும், நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சருமான ஜீவன் தொண்டமான், கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான், தவிசாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான மருதபாண்டி ராமேஸ்வரன் உள்ளிட்ட கட்சியின் முக்கியஸ்தர்கள் பலரும் மலர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

இதையடுத்து இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தலைமையகமான சௌமியபவனிலும் பூசை வழிபாடுகள் இடம்பெற்றிருந்தன. (04)

# சுமார் 70 மில்லியன் ரூபா பெறுமதியான அரிசி மூட்டைகள் அரச அரிசிக் களஞ்சிய சாலைகளில் இருந்து மாயமாயின!

குருநாகல் பிரதேசத்தில் உள்ள 2 அரச அரிசிக் களஞ்சியசாலைகளில் இருந்து சுமார் 70 மில்லியன் ரூபா பெறுமதியான அரிசி மூட்டைகள் காணமல் போயுள்ளதாக அரிசி சந்தைப்படுத்தல் சபையின் தலைவர் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், ஏழு இலட்சம் கிலோ அரிசி மூட்டைகள் இவ்வாறு காணாமற் போயுள்ளன. இச்சம்பவம் தொடர்பில் இரண்டு அதிகாரிகள் இடைநிறுத்தப்பட்டுள்ளனர். காணாமல் போன அரிசி முட்டைகளின் பெறுமதி சுமார் 65 - 70 மில்லியன் ரூபாவென மதிப்பிடப்பட்டுள்ளது, என்றார்.

இடை நிறுத்தப்பட்ட பணியாளர்களிடம் குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் முறையான விசாரணை நடத்தப்படும் என கோதுமை சந்தைப்படுத்தல் சபையின் தலைவர் சட்டத்தரணி புத்திக இத்தமல்கொட தெரிவித்துள்ளார்.

நிக்கவரட்டிய, பொல்கஹவெல மஹாஓயா உட்பட குருநாகல் மாவட்டத்தில் நெல் சந்தைப்படுத்தல் சபைக்கு சொந்தமான ஐந்து களஞ்சியசாலைகளில் 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் கொள்வனவு செய்யப்பட்ட நெல் இருப்புக்கள் காணாமல் போயிருந்தமை தொடர்பில் நெல் சந்தைப்படுத்தல் சபையின் உள்ளக ஊழியர்கள் குழுவொன்று விவசாய அமைச்சரிடம் முறைப்பாடு செய்திருந்தது.

இது தொடர்பான அறிக்கையை 3 நாட்களுக்குள் வழங்குமாறு நெல் சந்தைப்படுத்தல் சபையின் தலைவருக்கு பணிப்புரை வழங்க அமைச்சர் நடவடிக்கை எடுத்துள்ளார். (04)

# பொதுச்சுகாதாரப் பரிசோதகர்கள் இரு தினங்கள் பணிப்புறக்கணிப்பு



போக்குவரத்துக் கொடுப்பனவை அதிகரித்தல், ஏனைய சலுகைகளை வழங்குதல், மேற்பார்வை பொதுச்சுகாதாரப் பரிசோதகர்களுக்கான பரீட்சையை நடாத்துதல், உதவி பிராந்திய வைத்திய அதிகாரிகள் தங்களுக்கு கட்டளை வழங்குவதைத் தடுத்தல் உள்ளிட்ட கோரிக்கைகளை முன்வைத்து பொதுச்சுகாதாரப் பரிசோதகர்களின் பணிப்புறக்கணிப்புப் போராட்டம் இன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இதன் காரணமாக கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள கரைச்சி, பூநகரி, கண்டாவளை, பளை சுகாதார வைத்திய அதிகாரிகள் பிரிவுகளின் பொதுச்சுகாதாரப் பரிசோதகர்களின் செயற்பாடுகள் பாதிக்கப்பட்டிருந்தன.

இந்தப் பணிப்புறக்கணிப்பு இன்றும் நாளையும் முன்னெடுக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (02)



# தவறான அரசியல்வாதிகளை கட்சிகள் பாதுகாப்பது சமூக அவலமாகும் - கலாநிதி சசிந்து சுட்டிக்காட்டு



தவறான அரசியல் நடத்தை, திறமையின்மை மற்றும் பொதுமக்களின் எதிர்ப்பை எதிர்கொள்ளும் அரசியல்வாதிகள் போன்றோரை கட்சிகள் பாதுகாக்க முனைவதானது இந்நாட்டின் அரசியலில் மோசமான முன்னுதாரணமாக அமைந்துள்ளது, என சமூக ஆர்வலரும் மஹாநாம கார் நிறுவனத்தின் நிறுவனரும் நிறைவேற்று அதிகாரியுமான கலாநிதி சசிந்து மஹாநாம தெரிவித்தார்.

ஒரு நாட்டிற்கு நாகரீக அரசியலே தேவை! மக்களின் உயிரைப் பணயம் வைக்கும் ஆட்சி அல்ல. சிலர் இன்று பொதுமக்களை வெறுப்படையச் செய்யும் கேலிக்குரிய வார்த்தைகளையும் நடத்தைகளையும் வெளிப்படுத்துகின்றனர். இவற்றைச் சமூக ஊடகங்கள் மூலம் பரப்புவதன் மூலம் இன்று நம் நாட்டில் பெரும்பான்மையான மக்கள் அவர்களைப் பற்றிய சரியான தீர்ப்பை வழங்குவதற்கான தெளிவைப் பெற்றுள்ளனர். அதனால்தான் இதுபோன்ற தவறான செயல்களில் ஈடுபடுபவர்கள் சமூக ஊடகத் தணிக்கையை விரும்புகின்றனர் என்றார்.

பத்தரமுல்லை கொஸ்வத்தையில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பொன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில், நாட்டில் உண்மையான மாற்றம் ஏற்பட வேண்டுமானால் இளைஞர்கள் நம்பக்கூடிய மாற்றமொன்று தேவைப்படுகின்றது. இல்லையெனில், பாரம்பரிய அரசியல் கட்சிகள் மற்றும் புதிய தேர்தல் முறைகள் தொடர்பிலும் புதிய தலைமுறையினரின் நம்பிக்கை மேலும் சிதறடிக்கப்படலாம், என்றார்.

தமது கட்சியின் செயல்பாடுகள் பற்றியோ, அமைச்சர் பதவி பறிபோவது பற்றியோ பேசுபவர்கள், அவர்களின் செயற்பாடுகளின் மீது மக்களின் எதிர்ப்பு அதிகரிக்கும் போது பதவி ஆசையின் காரணமாக அப்போதும் கூட நியாயமாக நடக்காமல் மௌனம் சாதிப்பதை ஏற்க முடியாது.

நம்பகமானதும் ஊழல் மற்றும் மோசடியற்றதுமான நாடொன்றைக் கட்டியெழுப்புவதற்கு தூய்மையான அரசியல் தலைவர்கள், அறிஞர்கள் மற்றும் இளைஞர்களின் ஒருங்கிணைப்பு இன்றியமையாததாக மாறியுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார். (ரெ-20)

## இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு தனது கருத்துக்கு மன்னிப்புக் கோரினார்!

இஸ்ரேலுக்குள் புகுந்து ஹமாஸ் படையினர் நடத்திய தாக்குதலைத் தடுப்பதில் பாதுகாப்புப் படைகள் தோல்வியுற்றதாக இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு தெரிவித்த கருத்துக்கு கடும் விமர்சனம் எழுந்த நிலையில், அதற்காக அவர் மன்னிப்பு கோரியுள்ளார்.

இஸ்ரேலுக்குள் புகுந்து ஹமாஸ் படையினர் கடந்த 7 ஆம் திகதி பலமுனைத் தாக்குதல் நடத்தினர். இதற்குப் பதிலடி தரும் வகையில் காஸாவுக்குள் நுழைந்து இஸ்ரேல் தாக்குதல் நடத்தி வருகிறது. இந்நிலையில், இஸ்ரேல் பிரதமர் நெதான்யாகு சனிக்கிழமை வெளியிட்ட டுவிட்டர் பதிவில், ஹமாஸின் தாக்குதல் திட்டம் குறித்து எந்தக் கட்டத்திலும் எந்த முன்னெச்சரிக்கையையும் நான் பெறவில்லை. இஸ்ரேலுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டு தீர்வு காண முயற்சிக்கும் நிலைக்கு ஹமாஸ் படையினர் வந்துவிட்டதாகவே இராணுவ உளவுத் தலைவர் உள்பட அனைத்துப் பாதுகாப்புப் படைத் தலைவர்களும் நம்பிக் கொண்டிருந்தனர், எனக் குறிப்பிட்டிருந்தார்.

முன்னதாக செய்தியாளர்கள் சந்திப்பில், ஹமாஸ் தாக்குதல் நடத்தியதில் உங்களின் தோல்வியை ஒப்புக்கொள்கிறீர்களா?, என பிரதமரிடம் கேள்வி எழுப்பப்பட்டது.

போருக்குப் பிறகு இது தொடர்பாக விரிவான விசாரணை நடத்தப்படும். அப்போது, நான் உள்பட அனைவரும் நிச்சயம் பதிலளிக்க வேண்டும், என மறைமுகமாக அந்தக் கேள்வியை அவர் நிராகரித்தார். பிரதமர் நெதன்யாகுவின் இந்தக் கருத்துக்குக் கடும் விமர்சனம் எழுந்தது.

இந்நிலையில், விமர்சனங்களுக்கு விளக்கமளித்து பிரதமர் நெதன்யாகு வெளியிட்ட டுவிட்டர் பதிவில், நான் தவறு செய்துவிட்டேன். செய்தியாளர்கள் சந்திப்பைத் தொடர்ந்து நான் அந்தக் கருத்துகளைத் தெரிவித்திருக்கக் கூடாது. அதற்காக மன்னிப்புக் கேட்டுக் கொள்கிறேன். அனைத்துப் பாதுகாப்புப் படைத் தலைவர்களுக்கும் எனது முழு ஆதரவைத் தெரிவிக்கின்றேன். நமது நாட்டுக்காக முன்களத்தில் போரிட்டுக் கொண்டிருக்கும் பாதுகாப்புப் படை வீரர்களுக்கும் படைத் தளபதிகளுக்கும் எனது ஆதரவைத் தெரிவித்துக்கொள்கிறேன், எனத் தெரிவித்துள்ளார்.

## கொழும்பிலுள்ள ஒரு லட்சம் மரங்களில் 400 மரங்கள் ஆபத்தான நிலையில் உள்ளதாகக் கண்டுபிடிப்பு

### விசேட ஆய்விற்காக தாவரவியலாளர் வரவழைப்பு

35 கிலோ மீற்றர் நீள நிலப்பரப்பினால் சூழப்பட்டுள்ள கொழும்பு மாநகர எல்லைக்குள் காணப்படும் ஒரு லட்சம் மரங்களில் 400 மரங்கள் ஆபத்தான நிலையில் இருப்பதாக அனுமானிக்கப்படுவது தொடர்பில் விசேட ஆய்வொன்றை மேற்கொள்வதற்கு பேராதனை தாவரவியல் பூங்காவில் 30 வருட அனுபவமுள்ள தாவரவியலாளர் சுனில் கமகே கொழும்புக்கு வரவழைக்கப்பட்டுள்ளார்.




இது தொடர்பாக கருத்துத் தெரிவித்துள்ள கொழும்பு மாநகர சபையின் சுற்றாடல் திணைக்களப் பணிப்பாளர் தரங்கா குணவீர, கொழும்பு மாநகர சபையின் சுற்றாடல் அதிகாரிகளுடன் இது தொடர்பாக ஆய்வுகளை ஆரம்பித்துள்ளதுடன் அதற்கமைய உடனடியாக அகற்றப்பட வேண்டிய சுமார் 6 பாரிய மரங்களை அடையாளம் கண்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

அவற்றில் பெரும்பாலான மரங்கள் கொழும்பு 2 கொம்பனித்தெரு பிரதேசத்தில் அமைந்துள்ளதாக வும் அவர் குறிப்பிட்டுள்ளதுடன், முப்பத்தைந்து (35) அபாயகரமான மரங்கள் பற்றி பொலிஸார் அறிக்கைகளை வழங்கியுள்ளதாகவும் கூறினார்.

கொழும்பு -கொள்ளுப்பிட்டி பிரதேசத்தில் அண்மையில் அரச போக்குவரத்துப் பேருந்து ஒன்றின் மீது பாரிய மரமொன்று சரிந்து விழுந்ததில் ஏற்பட்ட விபத்தையடுத்தே கொழும்பு மாநகர சபை இந்த நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது.

இதேவேளை, கொழும்பு மாநகர சபைப் பிரதேசத்திற்கு தினமும் சுமார் மூன்றரை லட்சம் வாகனங்களும் ஐந்து லட்சம் மக்களும் வருகை தருகின்றனர் என கொழும்பு மாநகர சபையின் பதில் மாநகர ஆணையாளர் எஸ். ரோஹண தெரிவித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (ரெ-22)

## இங்கிலாந்தை உருட்டியெடுத்த இந்தியா!

உலகக் கிண்ணக் கிரிக்கெட் தொடரில் ஷமி, பும்ரா இருவரினதும் வேகத்தில் இங்கிலாந்தை நொறுக்கி புள்ளிகள் பட்டியலில் முதலிடத்துக்கு மீண்டும் முன்னேறியுள்ளது இந்தியா.

லக்னௌவில் நடைபெற்ற இந்த ஆட்டத்தில் நாணயச் சுழற்சியில் வென்ற இங்கிலாந்து பந்துவீச்சைத் தேர்வு செய்தது. இதனால் இந்த உலகக் கிண்ணத் தொடரில் முதல் முறையாக இந்தியா முதலில் துடுப்பெடுத்தாடும் நிலை ஏற்பட்டது.

ஆடுகளம் துடுப்பெடுத்தாடுவோருக்குச் சவாலாகவே இருந்தது. 25 ஆவது ஓவரிலேயே 100 ஓட்டங்களைக் கடந்தது இந்தியா. ரோஹித் - கேஎல் ராகுல் கூட்டணி 91 ஓட்டங்களைச் சேர்த்து, அடுத்தடுத்து வீழ்ந்த 3 விக்கெட்டுகளால் இந்திய அணிக்கு ஏற்பட்ட சரிவில் இருந்து மீட்டது.




39 ஓட்டங்களை எடுத்து ராகுல் ஆட்டமிழக்க, சதம் அடிப்பார் என எதிர்பார்க்கப்பட்ட ரோஹித் 87 ஓட்டங்களில் அடில் அடில் ரஷிதின் கூக்ளியில் விக்கெட்டைப் பறிகொடுத்தார். ஜடேஜா, ஷமி அடுத்தடுத்த ஓவர்களில் ஆட்டமிழக்க, இந்தியா 200 ஓட்டங்களைத்தாண்டுமா? எனச் சந்தேகம் எழுந்தது.


சூர்யகுமார் யாதவ் சற்று நிதானம் கலந்த அதிரடி ஆட்டத்தை வெளிப்படுத்தி 49 ஓட்டங்களை எடுத்தார். கடைசியில் குல்தீப் - பும்ரா இணை ஒவ்வொரு ஓட்டமாக எடுக்க இந்தியா 50 ஓவர்களில் 9 விக்கெட்டுகளை இழந்து 229 ஓட்டங்களைச் சேர்த்தது.

இலக்கு குறைவானதாக இருந்தாலும் ஆடுகளம் துடுப்பாட்டக்காரர்களுக்கு சவாலாக இருந்ததால் இந்திய அணி நம்பிக்கையுடனேயே பந்துவீச்சைத் தொடங்கியது. பும்ராவும் ஷமியும் இங்கிலாந்துக்குக் கடும் அழுத்தத்தைக் கொடுத்து விக்கெட்டுகளை அடுத்தடுத்து வீழ்த்தினார்கள். குல்தீப் யாதவும் ஜடேஜாவும் சுழல் பந்தினாலும் திணறடிக்க, இங்கிலாந்து அணி 34.5 ஓவர்களிலேயே 129 ஓட்டங்களுக்குச் சுருண்டு விட இந்திய அணி 100 ஓட்டங்களால் வெற்றிபெற்றது.

இந்திய அணியை சரிவில் இருந்து மீட்ட ரோஹித் சர்மாவுக்கு ஆட்டநாயகன் விருது அளிக்கப்பட்டது.

இந்த வெற்றியின்மூலம் புள்ளிகள் பட்டியலில் முதலிடத்துக்கு மீண்டும் முன்னேறியுள்ளது இந்தியா. விளையாடிய 6 ஆட்டங்களில் 5 இல் தோல்வியடைந்துள்ள இங்கிலாந்து கடைசி இடத்தில் நீடிக்கிறது. இதனால் இங்கிலாந்துக்கு மற்றுமொரு சிக்கலும் உருவாகியுள்ளது.

இந்த உலகக் கிண்ணத் தொடரில் முதல் 7 இடங்களைப் பிடிக்கும் அணிகள்தான் 2025 ஆம் வருட சம்பியன்ஸ் ட்ரொபியில் பங்கேற்கும். பாகிஸ்தானில் இந்தப் போட்டி நடைபெறுவதால் அந்த அணி நேரடியாகத் தகுதிபெற்றுள்ளது. இந்தத் தொடர் தோல்விகளால் தவித்துவரும் இங்கிலாந்து சம்பியன்ஸ் ட்ரொபி தொடருக்குத் தகுதி பெறுமா? என்ற கேள்வி தற்போது எழுந்துள்ளது (04)


JRIDE
BEYOND THE ROAD
ONLINE TAXI APP
FROM JAFFNA
ஆட்டோ கட்டணங்களால் ஆடிப்போயுள்ளீர்களா?
கவலையினை விடுங்கள்.
நாங்கள் தயாராகிவிட்டோம்!
யாழ்ப்பாணத்தில் இருந்து உங்களுக்காக
உருவாக்கப்பட்ட ரக்சி அப் (Taxi App)
உங்கள் பயணங்களை பாதுகாப்பானதாகவும் மகிழ்ச்சிகரமானதாகவும் செலவு குறைவாகவும் அமைத்துக்கொள்ளுங்கள்.
இப்போதே Play Store இல் இருந்து JRide - Beyond The Road App இனை இறக்கி உங்கள் தொலைபேசி இலக்கத்தை பயன்படுத்தி உங்கள் கணக்கை பதிவு செய்யலாம்!
jride
JRide - Beyond the Road
Speed IT net • Travel & Local
Install
JRide Driver: Drive & Deliver
Speed IT net • Travel & Local
Install
இலகு முறையில் கணக்கை பதிவு செய்து உங்கள் பயணத்தை தொடங்கலாம்!
YOU CAN
EASILY
REGISTER &
BOOK
YOUR RIDE
GET IT ON
Google Play
Download on the
App Store
+94 21 222 8358
JRIDE TAXI SERVICE
SPEED IT NET
பரமேஸ்வரா சந்தி,
136, பலாலி வீதி
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்
+94 703 563213
www.jride.lk




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.68, குறசெட் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 30.10.2023இல் வெளியிடப்பெற்றது.